## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், காலியாக உள்ள பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடங்களை நிரப்பிட நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் காலிப்பணியிட விபரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் namakkal.nic.in இணையதளத்தில் இடம்பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்களை 09.12.2020 தேதி முதல் மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு)–க்கு அலுவலக வேலை நாட்களில் காலை **10.00** மணி முதல் மாலை **5.45** மணி வரை நேரிலோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு), மாவட்ட ஆட்சியரகம் மூன்றாம் தளம், நாமக்கல் என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 07.01.2021 (வியாழக் கிழமை) அன்று மாலை **5.45** மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

7/12

மாவட்ட ஆட்சித் தலைவர்,
நாமக்கல் மாவட்டம்.

7/12/20